கற்பகம்

திங்கள் இதழ்

Katpakam

விலை ரூபா 10.00

மலர்-07 ஏப்ரல்-2015 இதழ்-83

குறளமுதம்-83

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பெருவிருப்புடன் படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதத் தரும்.

அதிகாரம்-9 அறத்துப்பால் விருந்து ஓம்பல்

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று

நாள்தோறும் தன்னை நோக்கி வருகின்ற விருந்தினரைப் பேணுகின்றவனது இல் வாழ்க்கை, வறுமையால் துன்புற்றுக் கெடுவதில்லை.

★ பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய ★

ஆலோசனைகளையும் உதவிகளையும் பனை அபிவிருத்திச் சபை வழங்கும்

சபையின் பொதுமுகாமையாளர் தெரிவிப்பு!

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் 2015ம் ஆண்டில் பனை அபிவிருத்திச் சபையிடமிருந்து எதிர் பார்க்கும் உதவிகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பான கோரிக்கைகளை எமக்கு விரைவாக தெரிவித்து உதவினால் இச்சங்கங்களுக்கு தேவையான எமது முழுமையான ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி உதவத் தயாராக உள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் பனை அபிவிருத்திச் சபையின் பொதுமுகாமையாளர் திரு லோகநாதன் அவர்கள்.

பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர்கள், பொது முகாமையாளர் ஆகியோருடன் பனை தென்னை வள சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடல் இம்மாதம் 18ம் திகதி சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் சமாசத் தலைவர் தலைமையில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2014ம் ஆண்டில் பனை அபிவிருத்திக் சபையால் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் தொடர்பாகவும் பொதுமுகாமையாளர் விரிவாக எடுத்துக்கூறினார்.

பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவரும் தற்போதைய பணிப்பாளர் சபை உறுப்பினருமாகிய

(2ம் பக்கம் பார்க்க)

93வது கூட்டுறவுதினம்

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 93வது சர்வதேச கூட்டுறவுதின விழாவை சிறப்பாக நடத்துவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

8ம் பக்கம் பார்க்க

இவ்வாண்டின் கூட்டுறவாளர் மேதினம் எழுச்சியுடன் நடைபெறவுள்ளது!

வடமாகாண கூட்டுறவாளர்கள் இவ்வாண்டுக்கான மேதின நிகழ்வினை எழுச்சியுடன் நடாத்துவதற்கு உரிய அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன.

இம் மேதினத்தை கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், தலைவர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து நடத்துகின்றனர்.

இம்மேதின நிகழ்வானது யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் தலைமையில் ஊர்திகள் சகிதம் பேரணியாக சங்கிலியன் பூங்காவிலிருந்து தொடங்கி பருத்தித்துறை வீதி வழியாக யாழ். மருத்துவமனை வீதியூடாக வீரசிங்கம் மண்டபத்தை சென்றடைந்து அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும்.

2ம் பக்கம் பார்க்க

போத்தல், மூடி கொள்வனவு செய்யும் சங்கங்களுக்கு அறிவுறுத்தல்!

பருவகாலம் ஆரம்பித்துள்ளமையால் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் தமது உற்பத்திகளை போத்தலில் அடைக்கும் செயற்பாட்டில் கூடிய கவனம் எடுத்து மேற்கொள்ள வேண்டும். இதற்கு வெற்றுப்போத்தல்களை கொள்வனவு செய்யும் சங்கங்கள் பின்வரும் நடைமுறைகளை கைக்கொள்ள வேண்டும் என கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

பகிரங்கமாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்தும் தமது கிளை நிலையங்களில் (2ம் பக்கம் பார்க்க)

சகாயநிதிய திட்டத்தில் இதுவரையில் 15 பனை தென்னை சங்கங்கள் இணைவு

வடமாகாண பனை தென்னை வள சமாசத்தின் சகாய நிதிய திட்டத்தில் இதுவரையில் 15ற்கு மேற்பட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் இணைந்துள்ளதோடு, ஏனைய சங்கங்களின் அங்கத்தவர்களும் பணியாளர்களும் மிக விரைவாக இணைந்து கொள்வதன்மூலம் இத்திட்டத்தினை வெற்றிகரமாக கொண்டுசெல்வதனூடாக பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் என சமாசப் பொதுமுகாமையாளர் திரு பொ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

சித்தனைத்துளி

"மன ஒருமையுடன் உழைப்பில் ஈடுபடும்போது அதன் பயன் அழியாச் சிறப்புடன் என்றும் நிலைத்திருக்கும்" – சுவாமி விவேகானந்தர்–

கற்பகக்கரு

மேதினம்

உலகில் முதலாளி, தொழிலாளர்களை அடிமைகள் என எண்ணி தமது மனம் போன போக்கில் நடந்துகொண்டமையோடு கொடுமைப்படுத்தி நீண்டநேரம் ஓய்வின்றி வேலை வாங்கியமைக்கு எதிராக ஏழைத் தொழிலாளர்கள் ஒன்றுதிரண்டு போராடி பேரணிகள் நடத்தி உயிர்த்தியாகம் செய்து எட்டு மணி நேரம்தான் ஒரு மனிதனால் வேலை செய்யமுடியும் என்பதை உலகத்தையே ஏற்றுக்கொள்ள வைத்த நாள் தான் மேநாள் ஆகும்.

இன்று அநேகமான நாடுகளில் மேதினம் கொண்டாடப்படுவது யாரால்? என நாம் உற்று நோக்கினால் முதலாளி வர்க்கம் சார்ந்த அரசியல் வாதிகளினால் ஆடம்பர நிகழ்வாகவும் கேளிக்கைள் நிறைய இடம்பெறும் நாளாகவும் இப்புனிதமான தினமாகிய மேதினம் கொண்டாடப்படுகின்றமையை நாம் அவதானிக்க முடியும்.

மேதினம் தோற்றம் பெற்ற சரித்திரத்தை நாம் பின்நோக்கிப் பார்ப்போமாக இருந்தால், அது எவ்வளவு கடினமான உழைப்பின் பின்பு பெற்ற ஒரு நாளென உணர்ந்துகொள்ளமுடியும். 1880களில் முதலாளித்துவ நாடாகத் திகழ்ந்த அமெரிக்காவில் மரவேலைத் தொழிலாளர்கள். புகையிரதத் தொழிலாளர்கள், சுரங்கத் தொழிலாளர்கள் போன்றவர்கள் 12 மணி நேரம், 18 மணி நேரம், 20 மணி நேரம் நாளொன்றுக்கு கடமைசெய்ய வேண்டுமென முதலாளி வர்க்கத்தினால் பணிக்கப்பட்டு கடினமாக உழைக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.

அத்தோடு மட்டுமன்றி நிறபேதங்களும் அதாவது கறுப்பின மக்களை தமது பரம்பரை அடிமைகளாக அவர்கள் இறக்கும்வரைக்கும் கொடுமைப்படுத்திய நிலையில் இவற்றை எல்லாம் தகர்த்தெறியும் வகையில் இத்தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் மத்தியில் தொழிற்சங்கங்களை உருவாக்கி 1884ம் ஆண்டு பாரிய தொழிற்சங்கமாக செயற்பட்டு அதன் தலைவர்கள் 8 மணிநேரம் தான் கடமைபுரிவோம் என முதலாளி வர்க்கத்துக்கு எதிராக போராடத் தொடங்கினார்கள். இப்போராட்டத்தை அடக்குவதற்கு முதலாளி வர்க்கம் தமது பண பலத்துடன் குண்டர்களை ஏவி நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாக தொழிற்சங்கத் தலைவர்கள் இறக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது, தொழிற்சங்க உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு நாட்டில் குழப்பம் ஏற்படுத்தியமையை காரணம் காட்டி தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. இத்தண்டனை மூலம் மரணித்தவர்களின் உடல்களை தாங்கியவண்ணம் 1890ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி மாபெரும் பேரணி அமெரிக்காவின் சிக்காக்கோ நகரிலே நடைபெற்றது. இதன் காரணமாக தொழிலாளர்களின் நீண்டகால கோரிக்கைகளை உலகம் ஏற்றுக்கொண்டது . இந்நாளே மே நாளாக தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுத்த, வென்றெடுக்கின்ற நாளாக உலகம் முழுவதும் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

ஆசிரியர்

ஆலோசனைகளையும்..... – 1ம் பக்கத் தொடர்ச்சி

திரு சிவபாதம் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், நான் தலைவராக இருந்த காலத்தில் திக்கம் வடிசாலை தொடர்பான செயற்பாடுகளை சபை மேற்கொண்ட போதிலும் அங்கு வரிவிலக்கு செய்யப்பட்ட பெருந்தொகையான நிதி வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டமை மனவேதனையைத் தந்தது. இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படாவண்ணம் கவனமாக செயற்படவேண்டும். 2015ம் ஆண்டுக்கான சங்கங்களின் தேவைகளை தமக்கு தெரியப்படுத்தினால் அது தொடர்பான துரித நடவடிக்கைகள் மேற்கொண்டு உதவ முடியும் எனவும் தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர் திரு பன்னீர் செல்வம் கருத்துரைக்கையில், பனை தென்னை வள சங்கங்களின் பனை வெல்ல உற்பத்தி தொழிற்சாலை இரண்டு சங்கங்கள் மட்டுமே செயற்படுத்தி வருகின்றன. பண்டத் தரிப்பு, ஊர்காவற்றுறை ஆகிய சங்கங்களே முறையாக தொழிற்சாலை மூலம் பனை வெல்லத்தை உற்பத்தி செய்து வருகின்றன. அதன் தரத்தை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை அவ்வப் போது நான் சென்று வழங்கி வருகின்றேன்.

போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலைக்கு நானும் எனது உத்தியோகத் தர்களும் நேரில் சென்று பல ஆலோசனைகளை வழங்கி வருவதோடு, போத்தல் கள்ளினை தரம் மிக்கதாக ஆக்குவதற்கான நடவடிக்கைகளை சங்கங்களும் கரிசனையுடன் மேற்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

சங்கங்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திப் பொருட்கள் தொடர்பான சுண்டுத்துண்டு உற்பத்தி தொடர்பான முழுமையான விபரங்கள் அச்சிடப்படுவதற்கான ஏற்பாடுகளை எமது ஆராய்ச்சி நிலையம் வழங்கத் தயாராகவுள்ளதாக தெரிவித்த அவர் குறிப்பாக பனை வெல்லத்தில் உள்ள ஊட்டச் சத்துக்கள் தொடர்பான விபரத்தை வழங்கத் தயாராக உள்ளதாகத் தெரிவித்தார்.

சமாசத் தலைவர் கருத்து தெரிவிக்கையில் பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபையில் பனை தென்னை வள சங்கங்களின் சார்பாக இரண்டு பிரதிநிதித்துவம் கிடைக்க ஆவன செய்வதன் மூலம் எமது சங்கங்களின் கோரிக்கைகளை அங்கே எடுத்துரைக்க வாய்ப்பாக அமையும் எனத்தெரிவித்தார்.

இவ்வாண்டின் ..... 1ம் பக்கத் தொடர்ச்சி

இப்பேரணியை வடக்கு மாகாண முதலமைச்சர் திரு சி.வி.விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைக்கவுள்ளதாகவும் வடக்கு கூட்டுறவு அமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்களும் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளது மட்டுமன்றி 5 மாவட்டங்களிலிருந்தும் ஊர்திகளுடன் கூட்டுறவாளர்கள் பெருந்திரளாக கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போத்தல், மூடி ..... 1ம் பக்கத் தொடர்ச்சி

விளம்பரம் செய்து கூறுவிலை பெற்று குறைந்த விலையில் தரமான போத்தல்களை கொள்வனவு செய்வதற்கு உரிய முறைப்படி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அனுமதியைப் பெற்று கொள்வனவு செய்யுமாறு தெரிவித்துள்ளார்.

போத்தலடைப்பு செயற்பாடுகளில் ஈடுபடும் சங்கங்கள் தமக்கு வேண்டிய மூடிகளை சமாசத்திடமே கொள்வனவு செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் வெளியாரிடம் கொள்வனவு செய்யக்கூடாது எனத் தெரிவித்த அவர், வெளியில் மூடிகளை கொள்வனவு செய்யப்பட்டிருந்தால் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் அது தொடர்பான விபரங்களை அறிக்கை வாயிலாக எனக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

நேர முகாமைத்துவம்

வி.மாலினி
வலிகாமம் கொத்தணி

"நேரம் பொன்னானது நேரத்தை வீணடிக்காதே" என்ற மகுட வாக்கியத்துக்கு அமைவாக கூட்டுறவுப் பணியாளர்களாகிய நாம் கடைப்பிடிக்க வேண்டியது நேரம். நேரம் என்பது எல்லோருக்கும் சமமாகக் கிடைக்கின்றது. ஒரு நாட்டின் சனாதிபதியாக இருந்தாலென்ன, சாமானியனாக இருந்தாலென்ன ஒரு நாள் என்பது அனைவருக்கும் 24 மணி நேரத்தைக் கொண்டதாக இருக்கின்றது. நேரத்தை திட்டமிட்டு செலவு செய்வதுதான் சிறந்த வழி. பணத்தைச் செலவழிப்பதில் காட்டும் சிக்கனத்தைவிட, நேரத்தை செலவழிப்பதில் அதிக சிக்கனம் தேவை. ஏனெனில் செலவழித்த பணத்தை மீண்டும் சம்பாதித்துவிடலாம். ஆனால் கடந்துபோன ஒரு நொடியைக்கூட நம்மால் திரும்பி பெறமுடியாது. நேரமில்லாமல் போவதற்கு முக்கிய காரணம் தேவையில்லாத விடயங்களில் நேரத்தை வீணடிப்பதுதான். எந்தக் காரியத்துக்கு முக்கியத்துவம் தருவது என்பதில்தான் வெற்றியின் சூட்சுமம் தங்கியிருக்கிறது.

உலகிலேயே பெரும்பாலான பக்தர்களைக் கொண்ட ஒரே மதம் "தாமதம்"தான் எதையும் தள்ளிப் போடுகிறவர்கள் வெற்றியையும் தள்ளிப் போடுகிறார்கள். 24 மணி நேரத் தினையும் சரியாக, முறையாக பயன்படுத்தினால் சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு வரமுடியும்.

என்னுடைய நேரத்தை நான் வீணடிப்பதை ஒருவாறு பொறுத்துக்கொண்டாலும் அடுத்தவரின் நேரத்தை நாம் கொள்ளையடிப்பதும், வேண்டுமென்றே அரட்டை அடித்து நேரத்தைச் செலவிடுவதும், தூங்கியே நேரத்தை சூறையாடுவதும் கூட்டுறவு வேலையாள் ஆணைக்குழு சட்டப் பிரமாணங்களின்படி பாரிய குற்றமாகும்.

ஒரு நாளில் நாம் செய்ய வேண்டிய வேலைகளையும் அதற்காக ஒதுக்கப்படவேண்டிய நேத்தையும் முன்கூட்டியே திட்டமிட்டு முகாமை செய்வதன் ஊடாக எமது செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும். வெற்றிக்கு திட்டமிடாதவர்கள் தாமாகவே தம் தோல்விக்கு வாய்ப்பளிக்கிறார்கள். எனவே, கூட்டுறவாளர்களாகிய நாம் அனைவரும் எமது நேரத்தை சிறந்த முறையில் முகாமை செய்பவர்களாக இருப்போமாயின் எம் வெற்றி எம் கையில்.

பணிமனைகளில் கடமை புரியும் பணியாளர்கள் கவனிக்க வேண்டிய நேரமுகாமையின் பங்கு.
(8 மணி நேரக் கடமை)

01. முக்கியமான வேலைகளை உடனடியாகச் செய்துமுடித்தல்.
02. நேரம் குறிப்பிட்டு கடமைகளை துரிதகதியில் செய்தல் வேண்டும்.
03. மதிய இடைவேளையில் மட்டும் உங்கள் கையடக்கத் தொலைபேசிக்கு இடமளியுங்கள்.
04. மீதமுள்ள 3 மணி நேரமும் இயன்றவரை நாளாந்தக் கடமைகளை முடிப்பதுடன் பிற்பகல் 4.30 மணியுடன் கடமைகள் முடிவடைந்ததும் குறிப்பு எழுதும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

இதையே நாம் கடைப்பிடித்தால் வெற்றி வந்துசேரும்.

பனை தென்னை வள சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் பனை அபிவிருத்திச் சபை பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலின்போது

அண்மையில் ஓய்வுபெற்ற அங்கத்தவர்களுக்கு முதல் முறையாக ஓய்வூதியம் வழங்கிய நிகழ்வில்...

கைகுலுக்கல்

அறியாமல் வியர்வையின் மூலமும் குலுக்கும் விதத்தின் மூலமும் நம் ஆளுமையை மற்றவர்களுக்கு உணர்த்தி விடுகிறோம்.

இன்று நாம் ஒருவரை ஒருவர் முதல் முறையாக சந்திக்கும் போதெல்லாம் கைகளைக் குலுக்கி வாழ்த்துத் தெரிவிப்பதை வழக்கமாக வைத்திருக்கிறோம். கைகுலுக்குவது எப்படித் தொடங்கியது?

திறந்த உள்ளங்கையைக் காட்டுவது உண்மையும், நேர்மையும் சார்ந்திருப்பதை உணர்த்துவதாக வரலாறு முழுவதும் வழங்கப்படுகிறது. சபதம் ஏற்கிறபோது உள்ளங்கையை முன்னால் நீட்டியபடி, நெஞ்சில் வைத்தும் உறுதிமொழியை உரக்கச் சொல்கிறோம். நீதிமன்றத்தில்கூட புனிதப் புத்தகத்தின்மீது வலது உள்ளங்கையை காற்றில் நீட்டி உண்மையைச் சொல்வதாக வாக்குமூலம் அளிப்பதும் வாடிக்கை. அப்படிப்பட்ட தன்மைகொண்டதுதான் கைகுலுக்குவதும். அது இப்போது முளைத்த நாகரிகச் செயல் அல்ல. குகைகளில் வாழுகிறபோதே மனிதனிடம் தொடங்கியது இந்தப் பழக்கம். இரண்டு குகை மனிதர்கள் சந்தித்தால் அவர்கள் கைகளில் எந்த ஆயுதமும் இல்லை என்பதைக் காட்டுவதற்காக உள்ளங்கையைத் திறந்து காண்பிப்பது அப்போதே புழக்கத்தில் இருந்தது. பிறகு அது மருவி கைகுலுக்கலாக ஆங்கிலம் பேசும் நாடுகளில் ஏற்பட்டது. வாழ்த்துச் சொல்வதற்கும் வழியனுப்புவதற்கும் இந்தச் செய்கை பயன்பட்டது. கைகளைக் குலுக்கும்போது ஓந்திலிருந்து ஏழுமுறை மேலும் கீழும் ஆட்டுவது வழக்கம்.

தமிழகச் சூழலில் கைகுலுக்குவது பாதியில் வந்தது. வணக்கம் சொல்வது ஆதியில் இருந்தது. அதுவும் கைகளில் ஆயுதம் இல்லை என்பதைக் காட்டுவதற்காகத்தான். அதே நேரத்தில் அப்படிக் கூப்புகிற கைகளுக்குள்ளும் கூர்மையான ஆயுதம் ஒளிந்திருக்கலாம் என்பதை திருவள்ளுவர் எச்சரிக்கைச் செய்கிறார். அப்படிப்பட்ட நிகழ்வை நாம் சரித்திரத்தில் சந்தித்திருக்கிறோம்.

"தொழுதகை உள்ளும் படை ஒடுங்கும் ஒன்னார் அழுதகண்ணீரும் அனைத்து" என்பது வள்ளுவம்.

எப்போதும் பொருந்துகின்ற இத் திருக்குறள் சிலரின் புன்னகையும் போலியானது, கண்ணீரும் கடானது என்பதைக் கற்றுத்தருகிறது. வணக்கம் வைப்பதில் ஒரு வசதி உண்டு. எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் ஒரே சமயத்தில் தெரிவித்து விடலாம். மேடையில் தோன்றுகிறபோது அரங்கத்தில் இருக்கின்ற ஆயிரம் பேரையும் ஒரே கைகூப்பால் வணங்கி விடலாம். அத்தனை பேருடன் கைகுலுக்குவதை சிந்தித்துக்கூட பார்க்க முடியாது.

கும்பிடுவது கைகுலுக்குவதைவிட மரியாதையான வெளிப்பாடு. அடுத்தவர்களோடு கைகுலுக்கினால் தொற்றுநோய் வந்துவிடுமோ என்று கையுறை அணிந்துகொண்டு கைகுலுக்கிய மஹாராஜாக்கள் இருந்தார்கள். வணக்கம் தெரிவிப்பதில் இந்தப் பதற்றங்கள் ஏதும் எற்படுவதில்லை. கைகளைக் குலுக்கும்போது நம்மையும் கைகளின் மூலம் நாம் பலவற்றை சொற்களில்லாமலேயே சொல்கிறோம். "ஆள்க்காட்டி விரலை கட்டை விரலின்மீது வைத்து" எதிரே இருப்பவர்களுக்குக் காட்டினால் "நன்றாக இருக்கிறது" என்று பொருள். அதைப்போலவே "ஆள்க்காட்டி விரலையும் நடுவிரலையும் மட்டும் ஆங்கில "வி" வடிவில்" காட்டினால் "வெற்றி" என்று அன்மைக் காலமாக மக்களிடம் நிலைவிவரும் கருத்து. இரண்டாம் உலகப் போரின்போது வின்ஸ்டன் சர்ச்சில், இங்கிலாந்து வெற்றிபெற்றபோது இந்த சமிக்ஞையை பயன்படுத்தினார். இப்போது அதை பல தலைவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்தச் சமிக்ஞையை உள்ளங்கை வெளியே தெரிவது போல காட்டினால் அது வெற்றியையும் அமைதியையும் குறிக்கும். மாற்றிக் காட்டினால் அதற்குத் தவறான அர்த்தம் உண்டு. அடுத்தவரை அவமானப்படுத்துவதாகப் பொருள்.

கைகுலுக்குவது அனிச்சமான செயலல்ல. ஆனால் எப்படிக் குலுக்குகிறோம் என்பது நம்மை மீறி வெளிப்படும் குறியீடு. ஒருவர் கைகுலுக்குவதை வைத்தே அவருடைய குணாதிசயத்தைக் கண்டுகொள்ளலாம். உள்ளங்கையை வைத்தே உள்ளத்தை அறிய உதவுவதுதான் கைகுலுக்குவது. வர்த்தகப் பரிமாற்றங்களிலும் பேச்சுவார்த்தைகளிலும் கைகுலுக்கும்போது மரபு சார்ந்த செயலாக மட்டும் இல்லாமல், எதிராளியை இனம்காணும் யுகமாகவும் இருக்கிறது.

ஒருவர் கைகுலுக்கும்போது நம்முடைய கையை அழுத்தமாகப் பிடித்து நேராகக் குலுக்கினால் உறுதியானவர், பிடிவாதக்காரர், நம்பகத்தன்மை உடையவர், சொன்ன சொல்லை காப்பாற்றுபவர் என்று அறிந்துகொள்ளலாம். ஒருவரிடம் வர்த்தகம் பேசச் சென்றால் அவர் முதலிலேயே அப்படிக் கைகுலுக்கினால் அவர் ஒப்பந்தத்தை மீறமாட்டார் என அறியலாம். நேர்காணலுக்கு ஒருவர் வரும்போது அப்படிக் கைகுலுக்கினால் அவரை நம்பி நிறுவனம் பணியில் நியமிக்கலாம்.

கைகுலுக்குபவர் முழுவதுமாக கைகுலுக்காமல் விரல்களை மட்டும் தொட்டு கைகுலுக்கினால் அவர்கள் மேம்போக்கானவர்கள், அவர்களுக்கென்று நிலையான புத்தி கிடையாது, சொன்னதைக் காப்பாற்றுவார்கள் என்று நம்ப முடியாது. 10ம் திகதி சரக்கு வரும் என்று சொன்னால் நிச்சயமாக வராது. அவர்கள் சொல்வதை "ஒரு சிட்டிகை உப்போடுதான் உட்கொள்ள வேண்டும்" என்று பொருள்.

சிலர் கைகுலுக்கும்போது அவர்கள் கையை மேலே வைத்துக் கைகுலுக்க முற்படுவார்கள். இப்படிப்பட்டவர்கள் நம்மீது ஆதிக்கம் செலுத்த விரும்புகிறார்கள் என்று பொருள். இதை அனுமதிக்கக்கூடாது. நாம் அப்படிப்பட்டவர்களோடு கைகுலுக்கும்போது தோசை திருப்புவதைப்போல அவர்கள் கையைத் திருப்பி நம் கையை மேலே வைத்து "நான் ஒன்றும் அடிபணிந்து போகிறவன் அல்லன்" என்று உணர்த்த வேண்டும். அப்போது அவர்கள் உயர்வு மனப்பான்மையை உதிர்த்து விடுவார்கள்.

சிலர் கைகுலுக்கும்போது தங்கள் கையை கீழே வைத்து உள்ளங்கையை காட்டிக் கொண்டு கைகுலுக்குவார்கள். இவர்கள் இயல்பிலேயே யாரிடமும் அடங்கிப்போகும் தன்மையுடையவர்கள். பலரோடு போராடவும் எதிர்நீச்சல் போடவும் அவசியமான பணிகளில் இவர்களை நியமிக்கக்கூடாது.

சிலர் கைகுலுக்கும்போது நம்மை பிடித்து இழுத்து அவர்களுக்கு நெருக்கமான வர வழைப்பார்கள். தங்கள் ஆதிக்கப் பகுதியில் நம்மை வைத்திருக்கவே விரும்புகிறார்கள். அவர்கள் பாதுகாப்பின்மை கொண்டவர்கள். இவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த பொதுவான இடத்தை தேர்ந்தெடுப்பது நல்லது.

சிலர் முன்னே வந்து கைகுலுக்குவார்கள். அவர்கள் எல்லா இடங்களிலும் ஒட்டிக்கியப்படுத்திக் கொள்ள தயாரானவர்கள்.

கைகுலுக்கல்களில் மூன்று விதமான பாணிகள் கவனிக்கத்தக்கவை. அவை கையுறை கைகுலுக்கல், கருவாட்டுக் கைகுலுக்கல், கைவிரல் முறி கைகுலுக்கல் ஆகும்.

கையுறை கைகுலுக்கல் "அரசியல்வாதி கைகுலுக்கல்" என்று சொல்வார்கள். நாம் ஒரு கையை நீட்டினால் அவர்கள் இரண்டு கைகளையும் நீட்டி நமது ஒரு கையை பிடித்து கையுறைபோல தங்கள் கைகளை ஆக்கிக்கொண்டு குலுக்குவார்கள். நன்றாகத் தெரிந்தவர்களிடம் மட்டும்தான் இப்படி கைகுலுக்கவேண்டும். (5ம் பக்கம் பார்க்க)

யாழ்.மாவட்ட ப.தெ.வ.அ.கூ.நி.பணியாளர் நலன்புரி கூ.சங்கத்தின் பணியாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் புதிதாக ஓய்வூதியம் பெறுவோரில் ஒரு தொகுதியினரை படத்தில் காணலாம்

ரஞ்சன் –அங்கத்தவர், கோண்டாவில் சங்கம்

எங்கள் மண்ணின் இனிய வளமாய்
எங்கும் நிறைந்த அரிய வரமாய்
பொங்கும் வனப்பும் மிளிரும் செழிப்பும்
தெங்கும் பனையும் சேர்ந்த உறவாய்
வையம் செழிக்க வாழ்வு சிறக்க
வளங்கள் கொழிக்கும்
பனை தென்னை வளங்கள்
எங்கும் விளைந்த இனிய வரங்கள்

தென்னைகள் எங்கள் வாழ்வின் துணைகள்
பனைகள் யாவும் மகிழ்ந்திட முனைகொண்ட
வினைத்திறனிக்க பயன்தரு கொடைகள்
தென்னையும் பனையும் தெளிந்த பதநீரும்
முன்னைய எங்கள் முக்காடிட்ட வாழ்வதனை
பின்னைய நாளில் பிய்த்தெறிந்த வரங்கள்

இயற்கை எமக்களித்த இனிய கொடையாய்
வாழ்க்கை ஒளிர்ந்திட வழியமைத்த சுடராய்
வீழ்ந்தவர் வாழ்வினை ஏற்றி வைத்த ஏணியாய்
தாழ்ந்தவர் விதியினை மாற்றிய மதியாய்
வந்தெம் வாழ்வினுள் சேர்ந்தெம்மை செழுமையாக்கி
வளம் கொழிக்கும் பனை தென்னை வளங்கள்

கூட்டுறவு என்கின்ற குசேலரின் வீட்டுக்குள்
கொலுவுற்ற குபேரனாய்த் தடம் பதித்து
வளம் கொழிக்கும் பனை தென்னை வளங்கள்–நாம்
வடம்பிடித்த தேரின் மீதிருந்து அருள்பாலிக்கும்
கூட்டுறவு எமக்களித்த கூடிவாழ்தலின் பரமாத்துமாக்கள்

வளம் கொழிக்கும் பனை தென்னை வளங்கள்
பயன்தரு மண்ணுலகின் கற்பகதருக்கள் –இதனை
பயனுறு வழியிலிட்டுத் தரப்படுத்தி
தக்க வழிவகை செய்து வளமாக்கிப் பின் சென்றால்
இன்னும் துலங்கும் எம் வாழ்வு புவிதனில் மதிபோல

நாற்றெட்டு வகையான பயனுண்டு பனை வளத்தில்
நாற்றிசையும் வாழ்த்திடும் நலனுண்டு தென்னைதனில்
வேறு வளம் என்ன வேண்டும் வாழ்வு சிறப்புற
சோறு போட்ட இவ்வளங்கள் என்றும் எமதே
சாறு உள்ள வாழ்வினுக்கு வளம் தரும் இவை எமக்கு
பேறு பெற்றோம் பெருவாழ்வு நாமடைந்தோம்
வீறு கொண்டெழுந்து வெற்றி கண்டோம்
வளம் கொழிக்கும் பனை தென்னை வளங்களாலே

சமாசத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் அங்கத்தவர் ஓய்வூதியத் திட்டத்தன்கீழ் புதிதாக ஓய்வூதியம் பெறுவோரில் ஒரு தொகுதியினரை படத்தில் காணலாம்

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

இ.நாகேந்திரம்

நா.சதாசிவம்

சி.தேவராசா

செ.நடேசு

நா.மகாலிங்கம்

வை.சந்திரன்

மு.தம்பிரத்தினம்

பண்டத்தரிப்பு சங்கம்

செ.மரியதாஸ்

ஆ.மகாலிங்கம்

வேலணை சங்கம்

வீ.சிவராசா

க.கணேசலிங்கம்

மானிப்பாய்

க.சுப்பிரமணியம்

சங்கானை

க.மகாதேவன்

தெல்லிப்பளை

ம.சிவராசா

கோண்டாவில்

சி.பஞ்சலிங்கம்

கோப்பாய்


வ.சிவம்

கைகுலுக்கல் ..... 4ம் பக்கத் தொடர்ச்சி

சிலரிடம் கைகுலுக்கும்போது அந்தக் கையில் உயிர்ப்பு இருக்காது. சுரத்தோ அழுத்தமோ இருக்காது. இப்படிப்பட்டவர்கள் பலவீன மானவர்கள் என்பதோடு தங்களைக் காத்துக் கொள்வதிலேயே கவனம் செலுத்துபவர்கள் என்று தெரிந்துகொள்ளலாம். இவர்கள் பழக்கம் நம்பகத் தன்மையானதல்ல. இவர்கள் உண்மையுடன் சினே கம்கொள்ள மாட்டார்கள்.

சிலர் அவர்களுடைய ஆளுமையைக் காட்ட நம் கைவிரல்கள் முறிந்துபோகிற மாதிரி கை குலுக்குவார்கள். அது அவர்களிடம் ஒளிந்து கொண்டிருக்கும் ஒருவிதமான கோபம், பொறாமை போன் றவற்றை வெளிப்படுத்துவதாக இருக்கும். அந்த மாதிரி நேரங்களில் நாம் "ஆ" என்று வலியை வெளிப்படுத்தி இனிமேல் அவர்கள் அப் படிச் செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சிலர் நம் மணிக்கட்டைப் பிடித்தும் கை முழங்கையைப் பிடித்தும் இன்னொரு கையால் தோளைப் பிடித்தும் தங்களுடைய நெருக்கத்தை வெளிப்படுத்துவார்கள். இவற்றையெல்லாம் மிக நெருங்கிய நண்பர்களிடமும் உறவினர்களிடமும் மட்டுமே நாம் வெளிப்படுத்தலாம்.

கைவினைஞர்களுக்கும் ஓவியர்களுக் கும் விரல்கள் மிக முக்கியமானவை. அவற்றில் சிறிது வலி ஏற்பட்டாலும் சிங்கம் அசிங்கமாகி விடும். எனவே அவர்களிடம் நாம் கைகுலுக்குவ தைத் தவிர்ப்பதே நல்லது.

கை முறிவதுபோல கைகுலுக்குபவர் களை யாரும் பணியில் வைத்துக்கொள்ளமாட் டார்கள். பலம், உறுதி, முழுமை, நேரம் ஆகியவற்றைக்கொண்டு "கைகுலுக்கல் குறியீடு" ஒன்றை அறிஞர்கள் தயாரித்திருக்கிறார்கள். அதை வைத்து ஒருவருடைய குணாதிசயங்களைக் கூறி விடலாம். இந்தக் கைக்குள்தான் அத்தனை யும் ஒளிந்துள்ளது என்பது உண்மையல்லவா?

சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

- ✓ பெற்றுக்கொள்பவர் அல்ல, எப் போதும் கொடுத்து மகிழ்பவரே பேறுபெற்றவர்.
- ✓ உன்னைத் தவிர உலகில் வேறு யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.
- ✓ தன்னலத்தை ஒழிப்பதில்தான் உண்மையான மகிழ்ச்சி அடங்கி யுள்ளது.
- ✓ அழுகையே பலவீனத்தின் அறி குறி. அது ஒருவனை அடிமைத் தனத்தில் தள்ளிவிடும்.
- ✓ சுதந்திரமாகச் செயற்படுபவர்கள் தான் ஆலமரம் போல் வேகமாய் வளர்வார்கள்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுனவங்களின் உறுப்பினர், பணியாளர்

சகாய நிதிய நடைமுறைவிதி

நோக்கம் : சமாசத்தில் இணைந்துள்ள அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்கள், பணியாளர்கள் மற்றும் அவர் சார்ந்த குடும்ப உறுப்பினர்கள், ஏனைய கூட்டுறவு அமைப்புக்களின் உறுப்பினர், பணியாளர் ஆகியோர் எதிர்பாராத விபத்து பாதிப்புக்கு உட்பட்டு இறப்பு ஏற்படின் அக்குடும்பத்தின் நிதி தொடர்பான இடரினை போக்கும் வகையில் நிதி வழங்கி உதவுவதே இச் சகாய நிதியத்தின் நோக்கமாகும்.

குறிக்கோள் : அங்கத்தவர்கள், பணியாளர்கள் அவர்கள் சார்ந்த குடும்ப உறுப்பினர்கள் இக்கூட்டுறவு நிறுவனங்களையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். அவர்களது வாழ்க்கையில் ஏற்படும் திடீர் மரணங்களால் அக்குடும்பத்துக்கு ஏற்படும் நிதிக் கஸ்டத்தினைப் போக்கி உதவுவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

திட்டத்தின் பெயர் : வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் அங்கத்தவர், பணியாளர் சகாய நிதியம். (இந்நடைமுறை விதி கூட்டுறவுச் சட்டம், விதி, சமாச உபவிதி ஆகிய வற்றுக்கு உட்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

முகவரி : வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இல. 52, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

அ) அங்கத்துவம் : சமாசத்தின் உறுப்புரிமை பெற்ற பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் அவர்கள் சார்ந்த குடும்ப உறுப்பினர்கள், ஏனைய பதிவுபெற்ற கூட்டுறவு அமைப்புக்களின் அங்கத்தவர், பணியாளர் அகியோர் இந்நிதியத்தில் அங்கத்தவராக இணைந்து கொள்ளலாம். (அங்கத்தவர், பணியாளர் கட்டாயமாக இத்திட்டத்தில் இணைக்கப்படல் வேண்டும்.)

ஆ) அங்கத்துவ தகைமை :-

01. 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
02. தொழில்புரியும் அங்கத்தவர்கள், ஓய்வூதியம் பெறும் அங்கத்தவர்கள், சங்கத்தில் உறுப்பினராக இணைந்திருப்பவர்களும் இணைந்துகொள்ள முடியும்.
03. நிரந்தரப் பணியாளர்கள், தற்காலிக பணியாளர்கள், அமைய அடிப்படைப் பணியாளர்கள் ஆகியோர் இணைந்துகொள்ள முடியும்.
04. அங்கத்தவர் குடும்ப உறுப்பினர்கள், பணியாளர் குடும்ப உறுப்பினர்களும் இணைந்துகொள்ள முடியும்.
05. ஒரு உறுப்பினர் ஒரு சகாய நிதி உறுப்புரிமையை மட்டுமே பெற்றுக்கெள்ள முடியும்.

இ) திட்ட இணைவு :-

சமாசத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தினை பூரணப்படுத்தி அதனை சங்கம் பின்வரும் ஒழுங்கில் உறுதிசெய்தல் வேண்டும். அங்கத்தவர், பணியாளர்களின் விண்ணப்ப படிவத்தினை தலைவர், பொதுமுகாமையாளர் உறுதி செய்தல் வேண்டும். தலைவரின் விண்ணப்பத்தினை உபதலைவர், செயலாளர் உறுதிசெய்தல் வேண்டும். பொதுமுகாமையாளரின் விண்ணப்பத்தினை தலைவரும் செயலாளரும் உறுதிசெய்தல் மூலம் இத்திட்டத்தில் முறைப்படி இணைந்துகொள்ள முடியும்.

ஈ) திட்ட நிதி ஆண்டு (ஒரு வருடம்) :-

இத்திட்டத்தின் நிதியாண்டு சமாசத்தின் நிதியாண்டை கொண்டதாக அமையும். அதாவது, ஜனவரி 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரையான ஒரு வருடம்.

இத்திட்டமானது இவ்வருடம் ஏப்ரல் மாதம் 1ம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளதால் இத்திட்டத்தில் இணையும் ஒருவருக்குரிய நலத்திட்டம் 31.03.2016ம் திகதியுடன் பூர்த்தியடையும்.

உ) 1. திட்ட நிதி தொடர்பானது :-

இத்திட்டத்தில் இணைந்துகொள்பவர்கள் "இ" பகுதியில் குறிப்பிட்ட விபரத்துடன் ஒரு வருட நிதியாக ரூபா 1,000.00 (ஆயிரம் ரூபா) மட்டும் நிதி வருடம் ஆரம்பமாவதற்கு முன்னர் உள்ள வருடத்தின் டிசெம்பர் மாதத்தின் 31ம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

இதனை ஒரே தடவையில் செலுத்துதல் வேண்டும்.

திட்ட நிதி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் சமாச நிர்வாகமே பொறுப்பாகும்.

உ) 2. இத்திட்டத்தில் இணைந்து கொள்பவர்கள் (இ) பகுதியில் குறிப்பிட்டபடி விண்ணப்பிக்க வேண்டும். அப்படி இணைந்தவர்கள் தமது சகாய நிதியத்தினை உடன் செலுத்த காலதாமதம் ஏற்படின் சங்கங்கள் அந்நிதியினை பட்டியலிட்டு காசோலை மூலம் சமாசத்துக்கு அனுப்பி வைக்கலாம். அவ்வாறு அனுப்பப்பட்ட பங்களிப்பு நிதியினை உரியவர்களிடம் சங்கம் பகுதி பகுதியாக அவர்களின் நலன்கருதி அறவிட ஆவன செய்யலாம்.

உ) 3. சங்கம் தமது நிதியினை சகாயநிதி உறுப்பினர்களுக்கு செலுத்தியும் அவர்கள் இத்திட்டத்தில் பூரணமாக இணைந்துள்ளதாக கருதப்பட்டு அவர்களுக்கு பாதிப்பு எற்படின் பாதிப்புக் கொடை வழங்கப்படும். இத்திட்ட நிதிக்கொடை ஒரு வருடத்தில் பாதிப்புக்கு ஒரு முறைதான் வழங்கப்படும்.

ஊ) திட்ட நிதிக் கணக்கு வைத்தல்

இத்திட்டத்துக்கு என உறுப்புரிமை சங்கங்களினால் வருட ஆரம்பத்தின் ஒரு மாதத்துக்குள் அனைத்து நிதிகளும் சமாசத்துக்கு காசோலைமூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட நிதியினை சமாசம் தனியான கணக்கு வைத்தல் மூலம் வங்கியில் நிர்வாக சபை தீர்மானத்துடன் வைப்பிலிட வேண்டும். காலத்துக்கு காலம் சேர்ந்த பணத்தினை நிலையான வைப்பில் வைப்பிட சமாச நிர்வாகம் பொறுப்புடையதாகும். வங்கியில் நிதியத்தின் பணம் வைப்பு செய்வதற்கோ அல்லது மீளப்பெற்றுக்கொள்வதற்கோ சமாச நிர்வாகத்தின் தீர்மானத்துடன் கூ.அ.உ.ஆணையாளரின் அனுமதி பெறப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும்.

(வளரும்)

பதவி நிர்ணய அங்கீகாரம் கிடைக்கவில்லை

தமது சங்கங்களின் பணியாளருக்கான பதவி நிர்ணய அங்கீகாரத்துக்காக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்தும் இதுவரையும் அதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெறவில்லை என சில சங்கங்களால் தெரிவிக்கப்படுகிறது.

வேலணை, சுன்னாகம், சங்கானை, கரவெட்டி சங்கங்கங் கள் மற்றும் வலிகாமம் கொத்தணி ஆகி யவற்றின் கணக்காளர், லிகிதர், காசாளர், களஞ்சிய முகாமையாளர், விற்பனை உதவியாளர், வாகன சுத்திகரிப்பாளர், அலுவலக உதவியாளர், கிராமிய வங்கி முகாமையாளர், களஞ்சிய மேற்பார்வையாளர் ஆகிய பதவிகளுக்கான அங்கீகாரமே இதுவரை கிடை க்கவில்லை என குறிப்பிட்ட சங்கங்களால் தெரிவிக் கப்பட்டுள்ளது.

30 வீத சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது!

நீண்ட காலத்தின் பின்னர் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு வினால் அனுப்பப்பட்ட கூட்டுறவு ஊழியர்களுக்கான சம்பள அதிகரி ப்பு தொடர்பான சுற்று நிருபத்துக் கமைய ஊழியர்களுக்கான 30 வீத சம்பள அதிகரிப்பை அனைத்து பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களும் வழங்கியுள்ளதாக அபிவிருத்தி உதவி ஆணையாளர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் கள், பொதுமுகாமையாளர் கள் மாதாந்த மாநாட்டின்போது பனை தென்னை வள சங்கங்களால் தெரி விக்கப்பட்டுள்ளது.

93வது கூட்டுறவு ..... 1ம் பக்கத் தொடர்ச்சி

கடந்த 5 வருடங்களாக இவ்விழாவினை வெகு சிறப்பாக உறுப்புரிமைச் சங்கங்களின் ஆதரவோடு நடாத்தி வந்துள்ளமையைப் போன்று இவ்வருடமும் நடாத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

93வது சர்வதேச கூட்டுறவுதின விழாவின் போட்டிகள் தொடர்பான விபரங்கள் மிக விரைவில் அனுப்பிவைப்பதற்குரிய ஏற்பாடுகளை சமாசம் மேற் கொண்டுள்ளது.

சாவகச்சேரி சங்கத்தில் கல்விப் பயிற்சியளிப்பு!

சமாசத்தின் சமூக கல்வி அபிவிருத்தி திட்டத் தின் ஓர் அங்கமாக இம்மாதம் 28ம் திகதி சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங் கத்தின் காரியாலயம், கிளை நிலையங்களின் பணியா ளர்களுக்கான பயிற்சிநெறி ஒன்று சாவகச்சேரி சங்கத் தலைவர் திரு கி.பூபாலசிங்கம் தலைமையில் மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாகியது.

இதில் சமாசத்தின் கல்வி உத்தியோகத்தர் வ.சிவகுமார், மாவட்ட கூட்டுறவுச் சபை கல்வி பயிற்சி யளிப்பு உத்தியோகத்தர் ஆகியோர் வளவாளர்களா கக் கலந்துகொண்டு கேள்விக் கொத்துக்கள் மூலமும் விரிவுரைகள் மூலமும் பயிற்சியளித்தனர்.

அண்மையில் 60 வயதைப் பூர்த்தி செய்து ஓய்வுபெற்ற அங்கத்தவர்களுக்கு முதல் முறையாக மாதாந்த ஓய்வூதியம் வழங்கும் நிகழ்வு இம்மாதம் 19ம் திகதி சமாச கூட்டுற வாளர் மண்டபத்தில் நடைபெற்றபோது...

எமது நிறுவனத்தின் தொழிற்பாடுகள்

அங்கத்தவர் நலத்திட்டம்
- ஓய்வூதியம் வழங்கல்.
- விபத்து, மரணக்கொடை வழங்கல்
- அங்கத்துவர், பணியாளர் கௌரவிப்பு.
- கல்விப் பயிற்சி வழங்கல்.

காரியாலய சேவை
- நிழற்படப் பிரதியாக்கல்
- தொலைநகல் வசதி
- வாடகை உழவு இயந்திர சேவை
- வாடகை கதிரை

கிராமிய வங்கிச் சேவை
- நிலையான வைப்புக் கடன்.
- ஓய்வூதியச் சேவை.
- பண்டிகைக்கால கொடுப்பனவு

உற்பத்திகள்
- பனைவெல்லம்
- போத்தலில் கள் அடைத்தல்

கல்விசார் ஊக்குவிப்பு சேவைகள்
- அங்கத்துவர், பணியாளர்களின் பிள்ளைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துவர்களுக்கான ஊக்குவிப்பு வழங்கல்.
- அங்கத்துவர், பணியாளர்களுக்கான பயிற்சி நெறிகள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்கல்.
- சங்கத்தின் ஆலோசனையின்கீழ் இயங்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தப்படி ரூபா 2,000 வழங்கல் மற்றும் முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டிக்கு அன்பளிப்பு ரூ. 2,500 வழங்கல்.
- அங்கத்துவர், பணியாளர் பிள்ளைகளுக்கு பாட சாலை உபகரணம் வழங்கல்.
- முன்பள்ளி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இலவச சீருடைத்துணி வழங்கல்.

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

டச்சு வீதி, சாவகச்சேரி. 021 227 0086

இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2015ம் ஆண்டு மார்ச் மாதம் வெளியிடப்பட்டது.